# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| Crmp | 91 | 2026 | |
| சா.ப. எண் | | சாட்சியின் பெயர்: | வயது |
| 1 | | கிருஷ்ணன் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | ராமசாமி | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/BC/MBC/SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 30/04/2026

புகார்தாரரின் சத்திய பிரமாண வாக்குமூலம்

1) நான் காவேரியம்மாபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான், எனது மனைவி, எனது தாய், தந்தையுடன் காவேரியம்மாபட்டியில் உள்ள எங்கள் வீட்டில் வசித்து வருகிறோம். கடந்த 20.10.2016 ஆம் தேதி அன்று எனது தோட்டத்திற்கு பக்கத்து தோட்டம் வீராச்சாமி என்பவரும் சொந்தமானதாகும்.எனக்கும் எனது பக்கத்து தோட்டத்துக்காரரான வீராச்சாமிக்கும் மின் இணைப்பு எடுப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்த வந்தது. எனது பக்கத்து தோட்டத்துக்காரரான வீராச்சாமி எனக்கு பாத்தியப்பட்ட எனது தோட்டத்தின் வழியாக மின் இணைப்பு எடுப்பதற்காக முயற்சி செய்து வந்தார்.

2) எனது தோட்டத்தில் நன்கு வளர்ந்த தென்னை மரங்கள் இருக்கும் காரணத்தினால் எனது தோட்டத்தின் வழியாக மின் இணைப்பை எடுக்காமல் வேறு வழியாக மின் இணைப்பு பெறும்படியாக சொன்னேன். இதன் காரணமாக எனது தகப்பனார் ராமசாமி கவுண்டர் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனு செய்து மரங்களை வெட்டாமலும், மரங்களை சேதப்படுத்தாமலும் மின் இணைப்பை எடுத்துக் கொள்ளுமாறு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் உத்தரவு பெற்றுவிட்டார். இதன் தொடர்ச்சியாக எனது பக்கத்து தோட்டத்துக்காரரான வீராச்சாமி ஒட்டன்சத்திரம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கோட்டைச்சாமி, சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன், சார்பு ஆய்வாளர் விஜயசாரதி, பெண் சார்பு ஆய்வாளர் கலைவாணி, காவலர் முத்துச்சாமி, காவலர் கார்த்திக், பெண் காவலர்

சத்யா ஆகியோரையும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை செய்யும் நபர்களையும் தன்னுடன் கூட்டிவந்து எனது தோட்டத்தின் வழியாக மின்சார இணைப்பை எடுப்பதற்காக முயற்சி செய்தனர். அப்போது நானும், எனது மனைவி, எனது மச்சுணன் காளிமுத்து, எனது இன்னொரு பக்கத்து தோட்டத்துக்காரான செல்லமுத்து ஆகியோர் எனக்கு சொந்தமான தோட்டத்து வீட்டில் இருந்தோம். எனது தாயாரும், தகப்பனாரும் தோட்டத்தில் இருந்தனர். அப்போது வீராச்சாமியும் அவரது ஆட்களும் தென்னை மரத்தை வெட்டுவதை பார்த்த எனது தகப்பனார் நீதிமன்றத்தில் தென்னை மரங்களை வெட்டக்கூடாது என உத்தரவு இருக்கும்போது ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஏய் கிழவா ஒழுங்கா வண்டியில ஏறுடா என்று சொல்லி எனது தாய், தகப்பனாரரை பார்த்து இந்த வழியாகத்தான் மின் இணைப்பை எடுப்போம் அதை தடுத்தால் என்னுடன் ஸ்டேசனுக்கு வா என்று சொல்லி என் தாய், தந்தையை அடித்து இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

3) தோட்டத்து வீட்டின் அருகாமையில் வந்தபோது உன் மகன் எங்கடா என்று கேட்டார்கள். அப்போது நான் வீட்டிற்குள் இருந்தேன். அருகாமையில் உள்ள காலனியில் இருந்துதான் சத்தம் வருகிறது என்று நினைத்து கொண்டேன். அதன் தொடர்ச்சியாக காவலர்கள் முத்துச்சாமி, கிருஷ்ணன் மற்றும் கார்த்திக் எனது தோட்டத்து வீட்டின் திண்ணையில் நின்று "எத்தனை தடவடா உன் கூப்பிடுறது தேவிடியா மகனே" என்று சொல்லி கூப்பிட்டார்கள். சத்தம் கேட்கவே முதலில் எனது மனைவி வீரலட்சுமி வெளியே வந்து என்னை பார்த்து போலீசார் வந்துள்ளதாக சொன்னார். நான் வெளியே வந்து பார்த்தபோது எனது தோட்டத்தில் இருந்த ஒரு தென்னை மரத்தை வெட்டி சாய்த்துவிட்டார்கள். இன்னும் இரண்டு மரங்கள் மொட்டையாக வெட்டப்பட்டு இருந்தது. நான் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் உத்தரவு பெற்றுள்ளேன். அதனால் மரங்களை வெட்டாமல் உத்தரவின்படி எடுங்கள் என்று சொன்னேன். அதற்கு காவலர்கள் முத்துச்சாமி, கார்த்தி, கிருஷ்ணன் என்னை பார்த்து "எனக்கே சட்டம் சொல்லித்தர்ரயா"? என்று சொல்லி என்னை கைகளால் மூவரும் தாக்கினார்கள்.

4) என்னை அடிக்கும்போது எனது மனைவி வீரலட்சுமியும், எனது தாயார் ரெங்கம்மாள் என்னை அடிக்கவேண்டாம் என்று குறுக்கிட்டு தடுக்கவே அப்போது சார்பு ஆய்வாளர் காலைவாணி எனது அம்மா ரெங்கம்மாளின் தலைமுடியை கொத்தாக பிடித்துக்கொண்டார். அப்போது தலைமுடியை பிடித்து கீழ்புறமாக இழுக்க எனது அம்மா கீழே குனியும்போது எனது அம்மாவின் கழுத்தில் இருந்த 10 பவுன் தாலி சங்கிலியை சார்பு ஆய்வாளர் கலைவாணி அப்படியே தலை வழியாக கலட்டி அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். நான் அதை பார்த்து தாலி சங்கலியை ஏன் பிடுங்கினீர்கள் என்று கேட்டதற்கு பக்கத்தில் கொட்டப்பட்டு இருந்த கட்குவியலிருந்து

ஒரு பெரிய ஜல்லி கல்லை எடுத்து இடது பக்க நெற்றியில் தாக்கி ரத்தக்காயத்தை ஏற்படுத்திவிட்டார். எனது தோட்டத்தில் உள்ள வெங்காயப்பட்டறையில் வைக்கப்பட்டு இருந்த மூங்கில் குச்சிகளை எடுத்து வந்து காவலர்கள் முத்துச்சாமி,கிருஷ்ணன், கார்த்தி, காவல் ஆய்வாளர் கோட்டைச்சாமி ஆகியோர்கள் என்னை மாறி மாறி மூங்கில் குச்சிகளை கொண்டு கை, கால், முதுகு, உடம்பு முழுவதும் தாக்கினார்கள். என்னை தாக்கியதில் எனக்கு இரு கைகளிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது. எனது தோட்டத்து வீட்டில் வைத்து எனது மனைவி வீரலட்சுமியையும் காவலர்கள் சத்யா, விஜயசாரதி, சார்பு ஆய்வாளர் கலைவாணி ஆகியோர் கைகளால் தாக்கினார்கள். என்னையும், எனது மனைவியையும், எனது தாய், தகப்பனாரையும் காவல்நிலையம் அழைத்து வருவதற்காக எனது தோட்டத்து வீட்டின் வாசலில் வைத்து போலீஸ் ஜீப்பில் ஏற்றினார்கள்.

5) நான் இன்னொரு பக்கத்து தோட்டத்துக்காரரான செல்லமுத்துவிற்கு கொடுக்கப்பட வேண்டிய கடன் தொகை ரூ.53,000/-த்தை எனது டவுசர் பாக்கெட்டில் வைத்து இருந்தேன். சம்பவத்திற்கு முன்பாக செல்லமுத்து வந்ததும் கடன் தொகையை பெற்றுக் கொள்ளத்தான் அப்படி என் டவுசர் பாக்கெட்டில் வைக்கப்பட்டு இருந்த ரூ.53,000/- ரொக்கத்தை கிருஷ்ணன் ஷீ காலால் என் நெஞ்சில் உதைத்து ஜோப்பில் என்னடா என்று கேட்டு அந்த பணத்தை பிடுங்கி கொண்டார். அதேபோல் எனது திண்ணையில் சார்ஜ் போட்டு வைக்கப்பட்டு இருந்தத இரண்டு நோக்கியா செல்போன்களையும், எட்டாயிரம் ரூபாய் மதிப்பிலான நிக்கான் கை கேமராவையும் பிடுங்கிக்கொண்டார்கள். அதன்பின்னர் எங்கள் நால்வரையும் ஒட்டன்சத்திரத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள்.அதன்பின்னர் அப்போது மாலை 6.00 மணி இருக்கும். என்னை மட்டும் அழைத்துக்கொண்டு ஒட்டன்சத்திரத்தில் உள்ள அரசு மருத்துவமனையின் பின் வாசல் வழியே கூட்டிச் சென்றார்கள்.

6) எனது தந்தை, தாய், எனது மனைவி ஆகியோரை ஒட்டன்சத்திரம் மகளிர் காவல் நிலையத்திலேயே வைத்துக்கொண்டார்கள்.எனது நெற்றியில் ஏற்பட்ட காயத்திற்கு மட்டும் ஆறு தையல் அரசு மருத்துவமனையில் போடப்பட்டது. எனது வலது கை முழங்கைக்கு மேலாக ஏற்பட்ட காயத்திற்கு ஒரு கட்டு கட்டினார்கள். அதன்பின்னர் பைபாஸில் உள்ள தனியார் பாலாஜி மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். அங்கு எனது அம்மா, அப்பா, எனது மனைவி தனியார் மருத்துவமனைக்கு கூட்டிவந்தார்கள். அங்கு தனியார் மருத்துவமனையில் வைத்து போலீசார் எனது தாய், தந்தை, மனைவியிடம் கையெழுத்து பெற்றார்கள். எதற்கு எதில் கையெழுத்து செய்யப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி என்னை பழனி கோர்ட்க்கு அழைத்து சென்றார்கள். அப்போது மணி 9.00 மணி இருக்கும். நான் நீதிபதியை பார்க்க செல்லும் முன்பாக யாரிடமும் எதுவும் சொல்லக்கூடாது என்று

போலீசார் என்னை மிரட்டினார்கள். நான் அங்கு நீதிபதியிடம் போலீசார் என்னை அடித்ததை சொன்னேன். அப்போது போலீசார் என்னை கைப்பிடித்து பின்வாக்காக இழுத்தார்கள். அதன்பின்னர் என்னை மதுரை மத்திய சிறைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். சிறையில் என்னை பரிசோதித்த மருத்துவர்கள் எனக்கு அதிகமாக அடிப்பட்டு இருப்பதால் என்னை சிறையில் வைக்க முடியாது என்று சொல்லி மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் மருத்துவர்கள், திருமதி. கங்கா, திரு.கே.பி. சரவணக்குமார் என்னை பரிசோதித்து என்ன நடந்து என்று விசாரித்து அதை மருத்துவ குறிப்பேட்டில் பதிவு செய்தார்கள். அதன் பின்னர் நான் சிகிச்சைக்காக முடநீக்கியல் பிரிவில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் 38 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன்.

7) எனது இடது கை, ஆள்காட்டி விரல் மற்றும் கட்டை விரலுக்கு இடையே எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது. அதற்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். வலது கையில் மணிக்கட்டும், முழங்கைக்கும் இடையேயான எலும்பில் முறிவு ஏற்பட்டு இருந்தது. எனது வலது கையில் முழங்கைக்கு மேலான தோள்பட்டைக்கு கீழான பகுதியில் ஏற்பட்டு இருந்த காயத்திற்கு தையல் போடப்பட்டு இருந்தது. அதன்பின்னர் நான் பிணையில் வந்தேன். 02.05.2017 ஆம் தேதி அன்று ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் என்னை தாக்கிய போலீசாருக்கு எதிராக புகார் அளிக்க சென்றேன். அப்போது என்னை தாக்கிய கோட்டைச்சாமி தான் அங்கு காவல் ஆய்வாளர் என்று தெரியாமல் அங்கு சென்றுவிட்டேன். காவல் ஆய்வாளர் கோட்டைச்சாமி என்னை பார்த்து போலீசார் மீது புகார் அளித்தால் குடும்பத்தோடு உன்னை காலி செய்து விடுவேன் என்று மிரட்டி வெளியே ஓடுடா என்று என்னை துரத்திவிட்டார்.

8) 08.05.2017 ஆம் தேதி அன்று திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு தபால் அனுப்பினேன். நான் அனுப்பிய புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்பின்னர் இந்நீதிமன்றத்தின் முன்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்படி மனு செய்து நீதிமன்றத்தில் உத்தரவையும் பெற்றுக் கொண்டேன். அதன் பின்னர் காவல் ஆய்வாளர் கோட்டைச்சாமி, காவலர் சத்யா, விஜயசாரதி, கலைவாணி, கார்த்திக், கிருஷ்ணன், முத்துச்சாமி ஆகியோர் மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எந்த நடவடிக்கையும் இல்லாமல் இருந்தது.

**அதன்பின்னர் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவத்தில் ஈடுப்பட்ட காவலர்களை விசாரிக்காமல் இச்சம்பவம் நடக்கவில்லை Mistake of Fact என்று குறிப்பிட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து வழக்கை முடித்துக் கொண்டார்கள்.**

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட் சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.30 18:36:12 +0530

Judicial Magistrate
Oddanchatram.Date : 30/04/2026